மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: அப்படிப்பட்ட வாரியம் ஹரியாணு மாநிலத்திலே செயல்படுகிறது. ஆனல், அவர்கள் விவசாயி களுக்குக் கடன் கொடுத்து, அதைக்கொண்டு, விவசாயிகள் குழாய்க் கிணறுகள் தோண்டுவதில்லை. அவர்கள் பவர் டிரில்களை எப்பொழுது கொடுக்கிருர்களோ, அப்பொழுது, உடனடியாக, வாடகை—ரெண்ட்—ஹையர் சார்ஜ்—வாங்கிக்கொள்கிருர்கள். விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகளும் மற்ற வங்கிகளும் கடன் கொடுக்கின்றன.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, கோவை மாவட்டத் திலே அமைச்சரவர்கள் சொல்வது குடிநீருக்காகத்தான், பவர் டிரில்கள், இவைகளெல்லாம் கிடைக்கின்றன. விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. ஆனல், 360 அடி தோண்டியும் தண்ணீர் கிடைப்பதில்லை. அரசாங்கமே 400 அடி தோண்டினல் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலைமை இருக் கிறதே; அதற்குச் செலவு அதிகமாகிறது. ஆகவே, அரசாங்கமே பாதி கன்செஷன்ஸ் அல்லது முழு கன்செஷன்ஸ் கொடுத்து, அந்த போர் வெல்களை விவசாயிகளுக்குப் போட ஒரு அமைப்பை, கோவை ஜில்லாவில், எங்கு அதிகமாக இருக்கிறதோ, அங்கு செய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, விவசாயத் திற்கு 300 அடி, 400 அடி போனல் கூட, அதன் மூலமாகத் தண்ணீர் கிடைக்குமானல் கோவை மாவட்ட விவசாயிகள் விவசாயத்தில் நட்டப் படுவதாகச் சொல்லவில்லை. விவசாயத்திலே உண்மையாக ஈடுபட்டிருப்ப வர்களைச் சொல்கிறேன். ஆகையினல், தேவையான அளவுக்கு வங்கி களிலே கடன் வாங்கிக்கொள்ள வேண்டுமே தவிர, போர் வெல்களை கொடுக்க வேண்டுமென்றே, அரை விலையில் கொடுக்க வேண்டுமென்றே கேட்பது முறையல்ல என்று அரசு கருதித்தான் விவசாயிகளுக்குத் தனியாக வாடகை வைத்திருக்கிறோம். விவசாயத்திற்கு வசூலிப்பதை விட, மற்றவற்றிற்கு அதிகமாக வசூலிக்கிறோம். ஆனல், விவசாயத் திற்கு மிகவும் குறைவாக வசூலித்துச் சலுகை கொடுத்து வருகிறோம்.

Agro Engineering Co-operatives

*626 Q.—Thirumathi T.N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) wheter there is a proposal with the Government to establish block level agro engineering co-operatives in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) & (இ) வளர்ச்சி வட்டார அளவில் அதாவது பிளாக் அளவில் 300 வேளாண் பொறியியல் கூட்டுறவு பணி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1973-74-ம் வருஷம் தொடங்கப்பட்ட பட்டதாரிகள் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூ. 1·5 கோடி உதவியுள்ளது.

1975 ஏப்ரல் 10]

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த வட்டார அளவில் அமைக்கப்பட்டிருக்கிற வேளாண் பொறியியல் சங்கங்கள் எந்த மாதிரி யானச் செயல்களை செய்து வருகின்றன? அதாவது, டிராக்டர் போன்ற விவசாய இயந்திரங்களை வாங்கி வாடகைக்கு விடுகின்றனவா? அல்லது தனியார் வைத்திருக்கிற டிராக்டர்களைப் பழுதுபார்க்கின்ற வேலைகளைச் செய் கின்றனவா? அப்படியென்றால், வட்டாரங்களில் இரண்டு மூன்று டிராக் டர்களை மலிவான விலையில் வாங்கிக் கொடுக்க கழகம் மூலம் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்த வேளாண்மைக் கூட்டுறவுப் பொறியியல் பணி நிலையங்கள் ஏற்கனவே டிராக்டர்களை வாடகைக்குக் கொடுக்கின்றன. அதுவுமல்லாமல், தெளிப் பான் இயந்திரங்களை (Power Sprayers) வாடகைக்குக் கொடுக்கிறோம். அதுவுமில்லாமல் அந்தத் தெளிப்பான்களை ரிப்பேர் செய்கிற பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் கொடுக்கிற அந்த வாடகையோ அல்லது சார்ஜோ குறைந்த அளவில்தான்—அது தொடர்ந்து இப்பொழுது வாங்கப்பட்டு வருகிறது விவசாயிகளிடமிருந்து.

திரு. இரா. மாணிக்கவாசகம்: தலைவரவர்களே, இத்தகைய சங்கங் கள் ஆரம்பிக்கப்பட்டும், இன்னும் பல்வேறு சங்கங்களுக்கு விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டு, டிராக்டர்கள், டிரில்லர்கள், பவர் மெஷின்கள் மற்ற கருவிகள் எல்லாம் இன்னும் அமைக்கப்படாமலும், அதற்கான பணமும் கடன்களும் கிடைக்காமலிருக்கிறது. அதை உடனடியாகக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, பணம் கிடைக்காமலிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்கெனவே, ரூ. 1·5 கோடியை மத்திய அரசு கொடுத்திருக்கிறது என்பது மட்டுமல்லாமல், ஸ்டேட் பாங்கி யிலிருந்து ஒவ்வொரு பிளாக்குக்கும், அதாவது வட்டார வளர்ச்சிப் பகுதிக்கும் ரூ. 2 இலட்சம் அவர்கள் கடன் கொடுத்து உதவி செய் கிறார்கள். ஆகவே, எந்த இடத்திலாவது, குறிப்பாக அதிகப்படியான இயந்திரங்கள் அல்லது டிராக்டர்கள் தேவையென்று சொன்னால், அந்த இடங்களிலே உள்ள சங்கங்களிலே அதிகமாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய லாம்.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை, சந்தைப்புதுப்பாளையம் பகுதியில் வேளாண் பொறியியல் கழகம் இரண்டு இருக்கிறது. ஆனால், இதுவரை யிலும் நிர்வாகப் பொறியாளர் நியமிக்கப்படவில்லை. விரைவில் நிய மிக்கப்படுவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைக் குறித்துக் கொண்டிருக்கிறேன். அதை உடனடியாகக் கவனிக்கிறேன்.

[1975 ஏப்ரல் 10

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு இன் ஜினீயரியங் சங்கங்கள் இலாபகரமாக நடந்து கொண்டிருக்கின்றனவா ? அப்படி இலாபகரமாக நடந்து கொண்டிருக்குமானால் ஒரு பிளாக்குக்கு இரண்டு மூன்று திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : முதலிலே திட்டமிடப்பட்ட 300 எல்லா இடத்திலும் பூர்த்தியாகவில்லை. அதற்குப் பிறகு மற்றதைப் பார்க்கலாம். சங்கங்கள் எல்லாமே இலாபத்திலே நடக்கின்றனவா என்றால், இல்லை. சில நட்டத்திலேதான் நடக்கின்றன. தொடங்கும் போது நட்டம் ஏற்படத்தான் செய்யும். ஆனால், நாளாவட்டத்தில் போகப் போக, மக்கள்தான் அவற்றின் நன்மைகளைத் தெரிந்துகொண்டு, அதிகமான டிராக்டர்களை வாடிக்கையாக விடச் செய்ய வேண்டும், அல்லது தெளிப்பான்களை ரிப்பேர் செய்ய விடுவதன் மூலமோ தான் இலாபமாக நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வந்தவாசியில் இந்த மாதிரியான சங்கம் ஒன்று $1\frac{1}{2}$ வருடமாக பாங்கியிலே பணம் வாங்கி, ஷேர் காப்பிட்டல் போட்டுக்கூட, துவக்கப்படாமலிருக்கிறது. அது துவக்கப்படாமல் காலதாமதம் ஆகிறது, அதிகாரிகளை நியமிக்கவில்லை. இதை விரைவு படுத்தி, உடனடியாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்ன குறையை இங்கே குறித்துக் கொண்டேன், விரைவிலே இதை கவனிக்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : இந்தப் கூட்டுறவு பொறியியல் சங்கங்கள் தமிழ் நாட்டில் எந்த எந்த ஒன்றியங்களிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ? இன்னும் எல்லா ஒன்றியங்களிலும் ஆரம்பிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மொத்தம் 300 என்று சொன்னேன். அதிலே எவ்வளவு தொடங்கப்பட்டன என்ற குறிப்பு கைவசம் இல்லை, எந்த எந்தப் பகுதிகள் என்ற குறிப்பு இல்லை, தனியாக அதைப்பற்றிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரமுடியும்.

டிராக்டர் பணிமனை

* 627 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை அண்ணா விவசாய பண்ணையில் டிராக்டர் சர்வீஸ் சென்டர் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இல்லை.